## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) / மேல்நிலை முதலாம் ஆண்டு(+1) / பத்தாம் வகுப்பு துணைத்தேர்வு

## ஜூன் / ஜூலை 2024

### தேர்வு முடிவுகளை மதிப்பெண் பட்டியலாக / தற்காலிக மதிப்பெண் சான்றிதழாக (Provisional Mark Certificate) பதிவிறக்கம் செய்து கொள்ளுதல், விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறைகள்

## செய்திக்குறிப்பு

நடைபெற்ற ஜூன் / ஜூலை 2024, மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) / மேல்நிலை முதலாம் ஆண்டு(+1) / பத்தாம் வகுப்பு துணைத் தேர்வெழுதிய தேர்வர்கள் தேர்வு முடிவினை, மதிப்பெண் பட்டியலாக (Statement of Marks) / தற்காலிக மதிப்பெண் சான்றிதழாக (Provisional Mark Certificate) பின்வரும் நாட்களில் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது.

| வகுப்பு | தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் நாள் | இணையதள முகவரி மற்றும் தேர்வு முடிவுகள் பதிவிறக்கம் செய்யும் வழிமுறைகள் |
|---|---|---|
| 12–ஆம் வகுப்பு (+2) | 26.07.2024 (வெள்ளிக்கிழமை), பிற்பகல் 2.00 மணி முதல் | **www.dge.tn.gov.in** என்ற இணையதள முகவரிக்குள் சென்று "**RESULT**" என்ற வாசகத்தை " Click " செய்தால் தோன்றும் பக்கத்தில் **Supplementary Exam, Jun / Jul 2024 – Result – Statement Of Marks Download**" என்ற வாசகத்தினை " Click " செய்து தேர்வர்கள் தங்களது தேர்வெண் (Roll No.) மற்றும் பிறந்த தேதி (Date of Birth) ஆகிய விவரங்களை பதிவு செய்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது. |
| 10–ஆம் வகுப்பு (SSLC) | 30.07.2024 (செவ்வாய்க்கிழமை), பிற்பகல் 2.00 மணி முதல் | |
| 11–ஆம் வகுப்பு (+1) | 31.07.2024 (புதன்கிழமை), பிற்பகல் 2.00 மணி முதல் | |

## விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறை:

ஜூன் / ஜூலை 2024, மேல்நிலை துணைத் தேர்வுக்கான விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்களுக்கான வழிமுறைகள்

<table>
<tr><th>வகுப்பு</th><th>விண்ணப்பிக்க வேண்டிய நாட்கள்</th><th>கட்டணம்</th><th>வழிமுறைகள்</th></tr>
<tr><td>12-ஆம் வகுப்பு (+2)</td><td>29.07.2024 மற்றும் 30.07.2024</td><td rowspan="2">1. விடைத்தாள் நகல்<br>பாடம் ஒன்றிற்கு- ரூ.275/-<br><br>2. மறுகூட்டல்<br>• உயிரியல் பாடம் ரூ.305/-<br>• ஏனைய பாடங்களுக்கு ரூ.205/-</td><td rowspan="3">குறிப்பிட்டுள்ள நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கும், தென்காசி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, மயிலாடுதுறை, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் முதன்மைக்கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு நேரில் சென்று உரிய கட்டணம் செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும்.</td></tr>
<tr><td>11-ஆம் வகுப்பு (+1)</td><td>01.08.2024 மற்றும் 02.08.2024</td></tr>
<tr><td>10-ஆம் வகுப்பு (SSLC)</td><td>01.08.2024 மற்றும் 02.08.2024</td><td>விடைத்தாள் நகல்<br>பாடம் ஒன்றிற்கு- ரூ.275/-</td></tr>
</table>

**குறிப்பு:**

- விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பிக்கும் தேர்வர்கள் மட்டுமே பின்னர் மறுகூட்டல் / மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க இயலும்.
- மறுகூட்டல்-I கோரி விண்ணப்பிக்கும் மேல்நிலைத் தேர்வர்கள் பின்னர் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க இயலாது,

ஒம்/-
அரசுத் தேர்வுகள் இயக்குநர்

இடம் : சென்னை- 600 006.
நாள் : 24 .07.2024.